Registered as a News paper — பக்கங்கள் 6 — விலை ரூபா 5-00

நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM — மக்களின் தினசரி — Peoples Daily

நாதம் 04 — திருவள்ளுவர் ஆண்டு 2024 — ஐப்பசி 26 — (11-11-93) — வியாழக்கிழமை — ஓசை 266

## பல்கலைக்கழக அனுமதிபெற ஆசிரியர்களுக்கு வாய்ப்பு

அரசாங்க பாடசாலைகளிலும், அரசாங்கத்தின் அனுமதியுடன் தனியார் பாடசாலைகளிலும்கல்விகற்பித்து ஐந்து ஆண்டுகள் சேவை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் பல்கலைக்கழக பட்டப்படிப்பிற்கு அனுமதிக்கப்படவுள்ளனர். மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் டிசம்பர் 10ஆம் திகதிக்கு முதல் இப்படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம்என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலப் பாடம் உட்பட, கலைப்பாடங்கள், விஞ்ஞானப் பாடங்களில் இப்பட்டப்படிப்பு நடாத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் சம்பளத்தோடு லீவு வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பூநகரியில் உக்கிர மோதல் வெடித்தது!

# நள்ளிரவு முதல் தொடர் குண்டுச் சத்தங்கள்!

## கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பெரும் மோதலொன்று மூண்டுள்ளதாக தெரியவருகிறது. நேற்று நள்ளிரவுக்கு சற்று முன் மூண்ட இம் மோதல் இச்செய்தி எழுதப்பட்டுக் கொண்டிருந்தபோதும நடைபெற்றுக்கொண்டிருந்தது. நள்ளிரவிலிருந்து அப்பகுதியில் தொடர் குண்டுவெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும்கேட்டவண்ணம் இருந்தன. இச்சத்தங்கள் யாழ் நகரிலும் தெளிவாகக் கேட்டன. பரா வெளிச்சக் குண்டுகள் வானில் வீசப்பட்டு சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதேவேளை கடற்பரப்பிலிருந்து பீரங்கிப்படகுகள் பூநகரிப் பகுதியைநோக்கி தொடர்ச்சியாக தாக்குதலை நடாத்திய வண்ணம் இருந்தன.

## பாதுகாப்பு வரி அதிகரிப்பு; ஓய்வூதியருக்கு நிவாரணம்

(கொழும்பு)

பாதுகாப்பு வரி மூன்று சதவீதத்தில் இருந்து மூன்றரைச் சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாக வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் வாசித்த அமைச்சர் ஹெரல்ட் ஹேரத்தெரிவித்தார். அடுத்த ஆண்டில் தேவைப்படும் இராணுவச் செலவீட்டை ஈடுகட்டும் வகையிலேயே இப் பாதுகாப்புவரி உயர்வு செய்யப்பட்டுள்ளதாக வரவு-செலவுத் திட்ட விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ் வரவு செலவுத்திட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மீதான வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. சில வற்றிற்கு வரிகள் விதிப்பதை நிறுத்தி வைக்கும் சட்டம் கைவிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளுடன் நிறுவப்படும் தொழில்களுக்கும், ஏற்றுமதிக்கும் ஊக்குவிப்பு தரப்படுகிறது.

[6ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி போக்குவரத்தை தடைசெய்ய ஆனையிறவில் கடற்படைத் தளம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கான கிளாலி ஏரி ஊடான போக்குவரத்து மார்க்கத்தை முற்றாக தடை செய்யும் நோக்கில் ஆனையிறவுப்பகுதியில் புதிய கடற்படை தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விஷேட ராடர் வசதிகளுடன் ஆகாய, கடல் மார்க்கமான தாக்குதலை இலகுவாக நடத்தக்கூடிய திட்டத்துடன் நவீன வசதிகளைக் கொண்டதாக இந்த கடற்படைதளம் அமைக்கப்பட்டுள்ளதாக செவ்வாய்க்கிழமை ''ஐலண்ட்'' பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.

ஓர் உயர்மட்ட இராணுவ அதிகாரி இதுபற்றித் தெரிவிக்கையில்; 'கிளாலி' ஊடான போக்குவரத்தை தடுப்பதே இக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டதன் நோக்கம் என்று குறிப்பிட்டார்.

இப் பகுதியை அண்டிய நாகதேவன்துறை கடற்படைத் விருத்தியடையச் செய்யும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு உதவ ஹெலிகொப்ரரும், விமானங்களும் தயார் நிலையிலிருப்பதாகவும், இவை இப் புதிய கடற்படைத் தளத்தால் முன் களுக்கு உதவும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை இப்புதிய கடற்படை தளத்தில் அமைக்கப்பட்டுள்ள ராடர் கருவி கிளாலி நீரேரி பகுதியில் படகுகளின் தொடர் அணியொன்றின் அசைவை தெளிவாககாட்டியதை அடுத்து பிட்ட ஹெலிகொப்ரர், விமானங்கள் ஒருங்கிணைந்த தாக்குதலை மேற்கொண்டன என்றும் இதன் மூலம் பல வள்ளங்கள் மூழ்கியிருக்கலாம் என நம்பப்படுவதாக அந்த அதிகாரி குறிப்பிட்டிருப்பதாக அப் பத்திரிகையில் தெரிவிக்

## தேர்தலுக்கு தயாராகுங்கள்

### விஜேதுங்க கோரிக்கை

(கொழும்பு)

1994 இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு தயாராகுமாறு சிறீலங்கா ஜனாதிபதி டி.பி விஜேதுங்க தனதுகட்சி உறுப்பினர்களை கேட்டுள் ராக வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

''நாட்டின் வடக்கு- கிழக்கில் உள்ள பிரச்சினைக்கு தேர்தலுக்கு முன்னர் தீர்வு காணப்பட்டு விடும். அங்கும்

## 3 இளைஞர் கைது

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக மேற்கொண்ட தேடுதலின் போது தெற்கில் கைதான தமிழர்களில் மூவரது பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

கடந்த வாரம் நடாத்தப்பட்ட தேடுதல்களின்போது கொட்டாஞ்சேனைப் பகுதியில் சூரியகுலசிங்கம் சிவகுணராஜன் (வயது 31) என்ப

த்தை பாராளுமன்றத்தில் வாசித்த அமைச்சர் ஹெரல்ட் ஹேரத் தெரிவித்தார். அடுத்த ஆண்டில் தேவைப்படும் இராணுவச் செலவீட்டை ஈடுகட்

இவ் வரவு செலவுத்திட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மீதான வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. சில வற்றிற்கு வரிகள் விதிப்பதை

களுக்கும், ஏற்றுமதிக்கும் ஊக்குவிப்பு தரப்படுகிறது.

[6ஆம் பக்கம் பார்க்க]

# தேர்தலுக்கு தயாராகுங்கள்

## விஜேதுங்க கோரிக்கை

(கொழும்பு)

1994 இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு தயாராகுமாறு சிறீலங்கா ஜனாதிபதி டி.பி விஜேதுங்க தனதுகட்சி உறுப்பினர்களை கேட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்த அவர் இத்தேர்தலை சந்திக்க அனைத்து உறுப்பினர்களும் தயாராக வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

"நாட்டின் வடக்கு- கிழக்கில் உள்ள பிரச்சினைக்கு தேர்தலுக்கு முன்னர் தீர்வு காணப்பட்டு விடும், அங்கும் தேர்தல் நடத்துவதற்கான சூழல் ஏற்பட்டுவிடும் எனவே உங்கள் தொகுதிக்குச் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி செய்யுங்கள்" என டி. பி. விஜேதுங்க அங்கு தெரிவித்தார்.

# 3 இளைஞர் கைது

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக மேற்கொண்ட தேடுதலின் போது தெற்கில் கைதான தமிழர்களில் மூவரது பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

கடந்த வாரம் நடாத்தப்பட்ட தேடுதல்களின்போது கொட்டாஞ்சேனைப் பகுதியில் சூரியகுலசிங்கம் சிவகுணராஜன் (வயது 31) என்பவரும், மாத்தறை பஸ்நிலையப் பகுதியில் நின்ற பஸ்ஸிற்குள் வைத்து கனகசபேஸ் நடராஜா (வயது 21), நோனன் குமார் (வயது 28) ஆகிய மூவரும் கைதாகியவர்களில் அடங்குவர் எனத் தெரியவந்துள்ளது.

# கிளாலி போக்குவரத்தை தடைசெய்ய ஆனையிறவில் கடற்படைத் தளம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கான கிளாலி ஏரி ஊடான போக்குவரத்து மார்க்கத்தை முற்றாக தடை செய்யும் நோக்கில் ஆனையிறவுப்பகுதியில் புதிய கடற்படை தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விஷேட ராடர் வசதிகளுடன் ஆகாய, கடல் மார்க்கமான தாக்குதலை இலகுவாக நடத்தக்கூடிய திட்டத்துடன் நவீன வசதிகளைக் கொண்டதாக இந்த கடற்படைதளம் அமைக்கப்பட்டுள்ளதாக செவ்வாய்க்கிழமை "ஐலண்ட்" பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.

ஓர் உயர்மட்ட இராணுவ அதிகாரி இதுபற்றித் தெரிவிக்கையில்; 'கிளாலி' ஊடான போக்குவரத்தை தடுப்பதே இக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டதன் நோக்கம் என்று குறிப்பிட்டார்.

இப் பகுதியை அண்டிய நாகதேவன்துறை கடற்படைத் தளத்தைவிட இது மிகப்பலம் வாய்ந்ததாகவும் விஷேட வசதிகள் உள்ளனவாகவும் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடற்படையின் செயற்பாடுகளை இப் புதிய தளம், அபிவிருத்தியடையச் செய்யும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு உதவ ஹெலிகொப்ரரும், விமானங்களும் தயார் நிலையிலிருப்பதாகவும், இவை இப் புதிய கடற்படைத் தளத்தால் முன்னெடுக்கப்படும் தாக்குதல்களுக்கு உதவும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை இப்புதிய கடற்படை தளத்தில் அமைக்கப்பட்டுள்ள ராடர் கருவி கிளாலி நீரேரி பகுதியில் படகுகளின் தொடர் அணியொன்றின் அசைவை தெளிவாககாட்டியதை அடுத்து இத் தொடர் அணிமீது குறிப்பிட்ட ஹெலிகொப்ரர், விமானங்கள் ஒருங்கிணைந்த தாக்குதலை மேற்கொண்டன என்றும் இதன் மூலம் பல வள்ளங்கள் மூழ்கியிருக்கலாம் என நம்பப்படுவதாக அந்த அதிகாரி குறிப்பிட்டிருப்பதாக அப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்கா பாராளுமன்றத்தில் இருந்து

# ஹேரத் உரைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி டி பி. விஜேதுங்கவின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தின் ஆரம்ப உரையை நேற்று எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்தன.

வழமைக்குமாறாக அமைச்சரவையில் இல்லாத ஒருவர் பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன. வரவு - செலவுத்திட்ட உரை ஆரம்பிப்பதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வாசிக்க சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

இவ் அறிக்கை வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஐக்கிய சோசலிச முன்னணி, ஆகியவற்றின் உறுப்பினர்களும் அத்தாவுட செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் வெளிநடப்புச்செய்தனர்.

"அவ் அறிக்கையில் நிதி தொடர்பான முழுமையான

[6ஆம் பக்கம் பார்க்க]

# அநுராவிற்கு அமைச்சர் பதவி; ஐ.தே. காவினுள் பலத்த எதிர்ப்பு;

## சிரேஷ்ட அமைச்சர்களும் ஆட்சேபம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்ட அநுரா பண்டாரநாயக்காவிற்கு அமைச்சர் பதவி வழங்குவதில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இழுபறி நிலை தோன்றியுள்ளது. கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இவருக்கு அமைச்சர் பதவி வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவருவதை அடுத்து இந் நிலை தோன்றியுள்ளது. இதனால் அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படுவது தாமதம் அடையலாம் என ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன இதனால் அவர் இன்று அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வது சந்தேகமே என அவ்வட்டாரங்களைமேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரவையில் அநுராவிற்கு பதவிவழங்குவதை அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும், சிரேஷ்ட அமைச்சர்களும கடுமையாக எதிர்த்து வருவதாகத் தெரியவருகின்றது.

நேற்று நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் அநுரா விவகாரம் ஆராயப்பட்ட போது சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் அவருக்கு மந்திரிப் பதவி வழங்கப்படுவதை கடுமையாக கண்டித்தனர் எனவும் இதனால இன்று நடைபெறவிருந்த அநுராவின் பதவிப் பிரமாணம் தொடர்பாக எதுவும் கூறமுடியவில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# இன்று படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமை வழமையானநேரத்திற்கு நடைபெறும் என அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

# திறமையை நிரூபித்தால் அநுராவிற்கு உரிய பதவி

## - சிறிசேனகூரே

(கொழும்பு)

"அநுராபண்டாரநாயகா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சிறப்பாக செயற்பட்டு நிருபத்தாலேயே அவருக்குரிய இடம் கிடைக்கும், அவரின் திறமையான செயற்பாட்டை பொறுத்து இயற்கையாகவே உரிய இடத்தை பெற்றுக் கொள்வார்.

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சயின் பொதுச் செயலாளர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

அநுரா பண்டாரநாயகா போலவே ருக்மன் சேனநாயக்காவும், ஐக்கிய தேசியக்கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்டவர். அவர் அப்போதைய ஜனாதிபதியிடம் பதவி கேட்கவில்லை. தன் திறமையிலேயே அவர் நம்பிக்கை கொண்டவர்.

ஜனாதிபதி பிரேமதாசா தேசிய பட்டியலில் உள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் இடத்தை அவருககு வழங்கியிருப்பார், ஆனால் ருக்மன் சேனநாயக்கா தன்திறமையை வெளிப்படுத்தவே விரும்பினார்.

திருமதி ஹேமா பிரேமதாசா ஐக்கிய தேசியக் கட்சியில் பதவிப் பொறுப்பைபெற வேண்டுமாயினும் தன செயற்பாட்டை நிரூபிக்க வேண்டும்.

காமினி திசநாயக ஐ தே கட்சியில் இணைந்தாலும் இதையேதான் செய்ய வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்,

# திருமலையில் புலிகள் ராணுவ வாகனம்மீது தாக்கு

## சிப்பாய்பலி; வாகனம் எரிப்பு

(கொழும்பு)

திருமலையில் பித்தாவ என்ற இடத்தில் இராணுவ வாகனம் ஒன்றை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்கியதில் இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானார் என்று கொழும்புத் தகவல் தெரிவிக்கிறது.

இத் தாக்குதலின்போது வாகனத்தை செலுத்திவந்த சாரதியே பலியானார் என்றும் குமரேசன்கடவை என்ற இடத்தில் சக சிப்பாய்களை இறக்கிவிட்டு பம்புறு கஸ்வீவ என்ற இடத்தைநோக்கி வந்து கொண்டிருந்த சமயமே இத் தாக்குதல் இடம்பெற்றது.

பலியானவர் ஓட்டிவந்த வாகனம் தீ வைத்து கொளுத்தப்பட்டது என்றும் அத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

# 'சுதந்திரப் பறவைகள்' ஏடு இன்று வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான ''சுதந்திரப் பறவைகள்'' கார்த்திகை மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

இவ் இதழ் காந்தருபன் அறிவுச்சோலையில் குழந்தைகளுடன் தேசியத் தலைவர் வே. பிரபாகரன், கல்லறைக்குள்ளும் கவிபாடு, உழைத்து வாழ்வேன் மற்றும் மாவீரர்நாள் கவிதைகள், 'சங்கமம்' சிறுகதை, யுத்தங்களின் போது பாலியல் வன்முறை, மாவீரம் போன்ற பல அம்சங்களைத் தாங்கி இன்று வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

சகல வசதிகளும் கொண்ட காணியும் (2 பரப்பு) வீடும் (திருநெல்வேலி சந்தைக்கரு காமையில்) விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி வனிதா தேவி விவேகானந்தம் (C/O சோமசுந்தரம்) செம்பாட்டு லேன் [வீரவேங்கைஜெயராஜ் வீதி) பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கு. மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில் (6543)

### உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள்

உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும், சகல மணிக்கூடுகள்றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம், இளைகண்டிவீதி சாவகச்சேரி. (சி-7349)

### அனுமதிப்பரீட்சை

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப்பரீட்சை வினாத்தாள்களைப்பெற்றுக் கொள்ளலாம் வினாத்தாள் மு.ப 8.00 மணிக்கு வெளியிடப்படும். மேற்படிபரீட்சைக்கான மாதிரி வகுப்புக்களும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம். 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [6550]

### பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப்பண்டிகையைமுன்னிட்டு யாழ். பலநோக்குகூட்டுறவுசங்கக் கிளைகளில் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன. லக்ஸ்பிறே பால் மா 60 ரூபாய் படியும், ரவ்வை கிலோ 27 ரூபாய் படியும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் குடும்ப அட்டைக்கு 2லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் 25 ரூபா படியும், சன்லைட் 8 ரூபாவுக்கும் லக்ஸ் 11 ரூபாவுக்கும் வழங்கப்படவுள்ளன.

### கருத்தரங்கு

எதிர்வரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை முன்னிட்டு மாற்றம் சஞ்சிகையி


## யாழ். நகரில் ஓர் புது அத்தியாயம்!

❋ கண்ணைக் கவரும் வர்ணத்தில் அமைந்த சிறந்தரக சேலைகள் துணிவகைகள்
❋ ஆடவர் சேட்டிங், சூட்டிங்
❋ நவீன டிசைன்களில் அமைந்த தைக்கப்பட்ட ஆடைகள்
❋ சிறுவர் குழந்தைகளுக்கான இறக்குமதி செய்யப்பட்ட ஆடை வகைகள்
❋ பட்டு வேட்டி சால்வைகள்

இன்னும் பல பல!

௳ சிறந்த ரகம்! ௳ குறைந்த விலை!! ௳ நிறைந்த சேவை!!!

# எழினி

எவரும் என்றும் நாடுவது

## எழினி புடவை வாணிபம்

பெரியகடை, யாழ்ப்பாணம்.


(சி-7893)


## சிரமதான அடிப்படையில் குளங்கள் புனரமைப்பு

வவுனியா கோட்டத்திலே காலபோக நெற்செய்கையை அதிகரிக்கும் நோக்குடன் சிறு குளங்களை புனரமைக்கும் பணியில் வவுனியா கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அப்பகுதி மக்களுடனும், கிராமிய உற்பத்திக்குழுக்களுடனும்இணைந்து செயற்பட்டு வருகிறது.

குளக்கட்டுகளில் உள்ள அணைக்கட்டுக்களில்ஏற்பட்ட உடைப்புக்களை நீர் தேங்கி நிற்கக்கூடிய வழிகளில் புனரமைப்புச்செய்தும், புதிதாக அணைக்கட்டுகள் வெட்டியும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 6-ம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடிதனில் 12.07.1959

ஆள்பவன் பிடிதனில் 19.10.1987

செல்வன்

### துரைஜயா பாலச்சந்திரன்

[கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் மகன்]

திதி: 11-11-1993

அன்பு மகனே! ஆசையாய் சந்திரன்
என்று அழைத்திடுவோம்
ஆனால் உமது குரலைக் கேட்டு
ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டனவே
ஆகாயக் கோட்டை எல்லாம்
அரைநொடியில் சாய்ந்ததென்ன
ஆனந்தம் எல்லாம் அவலமாய் போனதென்ன
தீயோடு சங்கமித்தாலும் மனதைவிட்டு போகாது
உமது நினைவும் பாசமும் பிரிவும் என்றும்
எங்களை விட்டு அகலாது

உங்கள் பிரிவால் சிந்தும் கண்ணீரையே காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்

சங்கரப்பிள்ளை றோட்,
ஆனைக்கோட்டை,

(6545)

## 45-ம் நாள் கண்ணீர் அலைகள்

28-09-1993 அன்று பி.ப. 5.30 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானையில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான புக்காரா விமானத் தாக்குதலின்போது பதுங்கு குழியில் சிக்குண்டு பலியானோர்:-

கந்தையா செல்வராசா (வயது 40) உரிமையாளர் உதயன் மரக்காலை சங்கத்தானை

இரத்தினகோபால் சுதர்சன் (வயது 12) ஆண்டு 5

செல்வராசா யசோதா (வயது 17) ஆண்டு 12, க.பொ.த(உ/த) சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்

செல்வராசா சுஜாத்தா (வயது 16) ஆண்டு11, க பொ த(சா/த) சாவகச்சேரி இந்துக் கல்லூரி

கணேசன் கௌசிகா (வயது 12) ஆண்டு 7 யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்

சின்னராசா பவானி (வயது 21) சங்கத்தானை

## நினைவு கூருகின்றோம் ...

### 1995-11-11

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் சுற்றிவளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

2 ம லெப் அப்துல்லா (இ. கிருஷ்ணானந்தன் - திருமலை)

2-ம் லெப் பவான் (விக்ரர் பஞ்சாட்சரநாதன் - கொத்தியகாடு, தொண்டமானாறு - யாழ்)

## பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப்பண்டிகையைமுன் னிட்டு யாழ். பலநோக்குகூட்டு றவுசங்கக் கிளைகளில் பொரு ள்கள் விநியோகிக்கப்படவுள் ளன. லக்ஸ்பிறே பால் மா 60 ரூபாய் படியும், ரவ்வை கிலோ 27 ரூபாய் படியும் வழங்கப்படவுள்ளன. அத்து டன் குடும்ப அட்டைக்கு 2லீற் றர் மண்ணெண்ணெய் லீற்றர் 25 ரூபா படியும், சன்லைட் 8 ரூபாவுக்கும் லக்ஸ் 11 ரூபா வுக்கும் வழங்கப்படவுள்ளன.

## கருத்தரங்கு

எதிர்வரும் க.பொ.த. சாதா ரண தரப் பரீட்சையை முன் னிட்டு மாற்றம் சஞ்சிகையி னரால் நடத்தப்படும் தமிழ் கல்வி கருத்தரங்கின் மூன் றாம் அமர்வு இன்று வியாழன் காலை 9 மணிக்கு யாழ் மத் திய கல்லூரியில் நடைபெறும். அரியாலை, கொழும்புத்துறை, பாஷையூர், யாழ். நகரப்பாட சாலைகள் இதில்கலந்துகொள் ளலாம் என தெரிவிக்கப்படுகி றது.

## நகர அபிவிருத்தி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாநகரசபை க்கு உட்பட்ட பிரதேசங்களை அவ்வப்பகுதி சனசமூக நிலை யங்களின் ஊடாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

இவ் நகர்பகுதிப் பிரதேசங் களைச் சிறப்பாக அபிவிருத்தி செய்ய சகல சனசமூக நிலை யங்களின் பூரண ஒத்துழைப் புக்கள் தமக்குத் தேவை என் றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே.பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்

[24]

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாட சாலை வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை அரங் கில் நடைபெறவுள்ளது.

அதிபர் திரு. கா. தவராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும், நல்லூர் கோட்ட உதவிக்கல்விப் பணிப் பாளர் திரு. தாணையா, கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

# 45-ம் நாள் கண்ணீர் அலைகள்

**28-09-1995 அன்று பி.ப. 5.30 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானையில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான புக்காரா விமானத் தாக்குதலின்போது பதுங்கு குழியில் சிக்குண்டு பலியானோர்:-**

கந்தையா செல்வராசா
(வயது 40)
உரிமையாளர்
உதயன் மரக்காலை
சங்கத்தானை

செல்வராசா யசோதா
(வயது 17)
ஆண்டு 12, க.பொ.த(உ/த)
சாவகச்சேரி மகளிர்
மகாவித்தியாலயம்

செல்வராசா சுஜாத்தா
(வயது 16)
ஆண்டு11, க பொ த(சா/த)
சாவகச்சேரி இந்துக்
கல்லூரி

கணேசன் கௌசிகா
(வயது 12)
ஆண்டு 7
யா/ திருக்குடும்பக் கன்னியர்
மடம்

இரத்தினகோபால் சுதர்சன்
(வயது 12)
ஆண்டு 5
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை

சின்னராசா பவானி
(வயது 21)
சங்கத்தானை

இரத்தினகோபால் துஸ்யந்திரன்
(வயது 10)
ஆண்டு 4
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை

சின்னராசா நிரஞ்சினி
(வயது 14)
ஆண்டு 8
சாவகச்சேரி மகளிர்
மகாவித்தியாலயம்

பாலசுந்தரம் சந்திரசேகர்
(வயது 10)
ஆண்டு 4
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை.

சின்னராசா பிரபாயினி
(வயது 10)
ஆண்டு 4
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை

பாலசுந்தரம் தர்ஷாஜினி
(வயது 02)
சங்கத்தானை

தங்கராஜா சுசீலா
(வயது 21)
சங்கத்தானை

கோபாலரத்தினம் சுபாஷினி
(வயது 14)
ஆண்டு 9
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

செல்லையா மகேஸ்வரி
(வயது 52)
மட்டுவில்

கோபாலரத்தினம் சுரேக்கா
(வயது 09)
ஆண்டு 4
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை

கணபதிப்பிள்ளை தங்கம்மா
(வயது 58)
சங்கத்தானை

திருமதி ஜெகதீஸ்வரன் சாந்தி
(வயது 31)
சங்கத்தானை

ஜெகதீஸ்வரன் தஷாயினி
(வயது 11)
ஆண்டு 5
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை

ஜெகதீஸ்வரன் தனேஸ்
(வயது 08)
ஆண்டு 3
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை

ஜெகதீஸ்வரன் ஜனனி
(வயது 08)
ஆண்டு 4
சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை

குருதி குடிக்கும் குண்டர்களைக்கொண்டு
குடாநாட்டைக் கொலைக்களமாக்கிட
கொதித்தெழுந்த தளபதிகள் – யாழ்தேவி என
பெயர்சூட்டி தொடுத்த போர் சிதறிட

சீற்றம் உற்ற தளபதிகள் அழகு
நகரைச் சாவடித்திட ஷெல்லடி விமான அடி
என்று பல அடிகள் தொடுத்திட
சங்கத்தானையிலே!

புல்லரின் புக்காரா தமிழர்களுக்கு
புதைகுழி தோண்டியதோ!
பாதுகாப்புத்தேடி பதுங்கு குழியில்
பதுங்கிய ஈர்பத்துப் பேரை

பதம்பார்த்ததில் மரணித்த மழலைகளில்
இந்துவின் இளைய மூத்த தலைமுறையும்
சகோதரப் பிள்ளைகளும்
இவர்களை நெஞ்சம் மறக்குமா?

**இவர்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்**

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**

★ **சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

★ **சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

(சி-7860)

எங்களை விட்டு அகலாது

உங்கள் பிரிவால் சிந்தும் கண்ணீரையே காணிக் கையாக்குகின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

சங்கரப்பிள்ளை றோட்,
ஆனைக்கோட்டை,

(6545)

## நினைவு கூருகின்றோம் ...

## 1995-11-11

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் சுற்றிவளைக்க முயன்ற சிறிலங்கா இராணு வத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய் திய –

**2 ம லெப் அப்துல்லா** (இ. கிருஷ்ணானந்தன் - திருமலை)

**2-ம் லெப் பவான்** (விக்ரர் பஞ்சாட்சரநாதன் - கொத் தியகாடு, தொண்டமானாறு - யாழ்)

**சிவன்** (குட்டித்தம்பி சிவகுமார் - சின்னக்கடற்கரை, தொண்டமானாறு - யாழ்)

பருத்தித்துறையில் நிகழ்ந்த நேரடிச் சமரினைத் தொலைக்காட்சிக்காக படம் பிடிக்கும்போது உலங்கு வானூர்தி தாக்கியதில் வீரச்சாவெய்திய –

**பட்டேல்** (தில்லையம்பலம் ரகுபதி - பெரியபுலம், பொலி கண்டி - வல்வெட்டித்துறை)

1987ஆம் ஆண்டு யாழ் - கோண்டாவில் பகுதியில் இந்தியப் படையினர் கைது செய்தபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய –

**குட்டி** (துரைசாமி கிருபாகரமூர்த்தி - குமரக்கோட்டம், கோண்டாவில் - யாழ்)

யாழ் - சுதுமலைப் பகுதியில் இந்தியப் படையினரு டனான சமரில் வீரச்சாவெய்திய –

**லெப். சுபாஸ்** (சண்முகம் வனந்தரன் - பொன்னாலை தெற்கு - யாழ்)

நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற் கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழ்ப் பொதுமக்கள்.

1988ஆம் ஆண்டு வட்டக்கச்சிப் பகுதியில் இந்திய படையினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச் சாவெய்திய –

**விஜய்** (யோகநாதன் ஞானசம்பந்தன் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)

யாழ் - கஸ்தூரியார் வீதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய –

**கப்டன் சரத்பாபு** (நாகராஜேஸ்வரன் சயந்தசிறி - பாண் டியன்தாழ்வு - யாழ்)

மன்னாரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப் பட்ட எமது ஆதரவாளரான உயர்வகுப்பு மாணவன்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான –

**ஆசிரியர் பாலகிருஷ்ணன்**

1989ஆம் ஆண்டு தென்னமரவடிப் பகுதியில் இந் தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய –

**இதயன்** (சீனித்தம்பி மகாலிங்கம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

1992ஆம் ஆண்டு மட்டு - புன்னைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிய தில் வீரச்சாவெய்திய –

**தாரகன்/கெனடி** (பாக்கியராஜா நடேஸ்வரன் - ஆரை யம்பதி - மட்டு)

அம்பாறை கடற்பகுதியில் 03 படகுகளில் மீன்பிடிக் கச் சென்று காணாமற் போன 10 மீனவர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-7892)

மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்**

## வருடாந்த பொதுக்கூட்டம்

தலைவர்:- பேராசிரியர் அ. துரைராசா
காலம்:- 1993-11-13 சனிக்கிழமை
பி.ப 2.00 மணிக்கு
இடம்:- கல்லூரி மைதானம்

கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. கனகசபாபதி
செயலாளர்

(6541)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

ஜெகதீசன் - சாந்தி (மனைவி) தஷா மரத்தொழிற்சாலை தசாயினி (மகள்) தினேஸ் (மகன் ஜெனனி (மகள்)
சின்னராசா - பவானி (மகள்) நிரஞ்சினி (மகள்) பிரபாவினி (மகள்)
கந்தையா - செல்வராசா (உதயன் மரத்தொழிற்சாலை)
செல்வராசா - யசோதா (மகள்) சுஜாதா (மகள்)
கணேசன் - கௌசிகா (மகள்)
கோபாலரத்தினம் - சுபாசினி (மகள்)
சுரேகா (மகள்)
கோபாலு - சுதர்சன் (மகன்) துஷ்யேந்திரன் (மகன்)
பாலசுந்தரம் - சந்திரசேகர் (மகன்) தசாயினி (மகள்)
தங்கராசா - சுசிலா (மகள்)
கணபதிப்பிள்ளை - தங்கம்மா (மனைவி)
செல்லையா - மகேஸ்வரி (மனைவி)

**வானின்று வீழ்ந்த வல்லரக்கர் கொடுங்குண்டால்
வண்ணமிழந்து மண்ணில் உதிர்ந்த வாசமலர்கள்
நினைவு கூர்ந்து.**

இவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ மீனாட்சி அம்மன் நாடகக் குழுவினர்

சங்கத்தானை,
சாவகச்சேரி. (6540)

மக்களின் பிரச்சினைகளை

## மனிதாபிமானரீதியில் அணுக அதிகாரிகளுக்கு அதிகாரம்

(கொழும்பு)

சட்டத்திற்குப் புறம்பான முறையில் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இருக்கும் சட்டங்கள் காலனித்துவ காலத்தில் இயற்றப்பட்டவை. இக்காலத்திற்குப் பொருத்தமற்றவை என பல தரப்பாலும் எடுத்துக்கூறப்படுவதை அடுத்து இவ்வாறு ஆலோசிக்கப்பட்டுவருகிறதாம்.

## 1-ம் ஆண்டு நிறைவு அஞ்சலி

மலர்வு: 10 — 10 — 1943



உதிர்வு: 13 — 11 — 1992

அருட்சகோதரி
**மேரிசி அஞ்சலா (அ. கா)**

அன்பின் உருவே
பண்பின் சிகரமே
தொண்டுள்ளமே
உதவு கரங்களே
பொறுமையின் சின்னமே
தியாகியின் திடமனமே.

உன் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 13-11-1993 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

தாளையடி,
செம்பியன்பற்று.

திரு.திருமதி கே.எஸ்.இராசையா (J P)
குடும்பத்தினர்

(சி-7884)

## சைவசமயப் பரீட்சை

(தொல்புரம்)

காரைநகர் மணிவாசகர் சபையினரால் வருடம்தோறும் நடாத்தப்படும் சைவசமயப் பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சுட்டெண்களின் விபரங்கள் காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும், மேற்படி பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு மார்கழி மாதத்தில் நடைபெறும் மணிவாசகர் விழாவின் போது பரிசில்களும், சான்றிதழ்களும் சபையினரால் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

### திருட்டு

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்டம் பார்க்கச் சென்ற இருவரின் சைக்கிள்களில் இருந்து டைனமோ, முன் லைற் என்பன திருடப்பட்டுள்ளன. 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியை பார்க்கச்சென்ற ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர், யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கப் பணியாளர் ஒருவர் ஆகிய இருவரினதும் சைக்கிள்களிலேயே மேற்படி திருட்டு நடைபெற்றது. கல்லூரியின் சைக்கிள் பாதுகாப்பு மண்டபத்திலேயே சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்ததாயினும் அனைவரும் நடைபெற்ற போட்டிகளில் ஒன்றிப்போயிருந்ததை சாதகமாக்கி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். (22)

### ஊழியருக்கு சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கு இம்முறை ''குமண'' கப்பலில் 100 துவிச்சக்கரவண்டிகள் எடுத்து வரப்பட்டன.

இவை இறக்கப்பட்டு தற்சமயம் யாழ் கல்வித் திணைக்களம் கொண்டுவரப்பட்டுள்ளன. இன்று முதல் ஊழியர்களுக்கு குறிப்பிட்ட தொகைக்கு துவிச்சக்கர வண்டிகள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## ஆங்கில ஆசிரியருக்கு சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)


7ஆம் ஆண்டுமுதல் 11ஆம் ஆண்டுவரை ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு கீழ்க்காணும் திகதிகளிலும், இடங்களிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி பழைய யாழ்ப்பாணம் வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும், எதிர்வரும் 16ஆம் திகதி பழைய மருதனார்மடம் பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும், எதிர்வரும் 17ஆம் திகதி பழைய பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும், எதிர்வரும் 18ஆம் திகதி சாவகச்சேரி கோட்ட ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இதில் மேற்குறிப்பிட்ட வகுப்புக்களிற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (யா)

## 45-ம் நாள் கண்ணீர் பூக்கள்

அவதரிப்பு: 06 — 02 — 1941



அபகரிப்பு: 28 — 09 — 1993

திருமதி
**செல்லையா மகேஸ்வரி**

''நோயுற்று அயராமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் பாவியேன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கி எனை ஒன் போரூர் ஐயா
நின் சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து''

**இவருடன் 28 09-1993 அன்று சங்கத்தானையில் இடம்பெற்ற விமான குண்டுவீச்சில் அகால மரணமான மாணவ மாணவிகட்கும் ஏனைய பொதுமக்களுக்கும் எமது அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம்.**

உயர்தர மாணவ ஒன்றியம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.
(6524)

# லலிதா பிடவை மாளிகை

உங்களை அழைக்கிறது

தங்களின்

## 3-ம் ஆண்டு நினைவுத் துளிகள்....

ஸ்ரீ மீனாட்சி அம்மன் நாடகக் குழுவினர்
சங்கத்தானை,
சாவகச்சேரி. (6540)

தாளையடி, திரு.திருமதி கே.எஸ்.இராசையா (J P)
செம்பியன்பற்று. குடும்பத்தினர்
(சி-7884)

கைவிளிசைளைப் சாட்டியுள்ளனர். (22)

## ஊழியருக்கு சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கு இம்முறை "குமண" கப்பலில் 100 துவிச்சக்கரவண்டிகள் எடுத்து வரப்பட்டன.

இவை இறக்கப்பட்டு தற்சமயம் யாழ் கல்வித் திணைக்களம் கொண்டுவரப்பட்டுள்ளன. இன்று முதல் ஊழியர்களுக்கு குறிப்பிட்ட தொகைக்கு துவிச்சக்கர வண்டிகள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

திருமதி
## செல்லையா மகேஸ்வரி

"நோயுற்று அயராமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் பாவியேன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கி எனை ஒன் போரூர் ஐயா
நின் சீரடிக் கீழ் வைப்பாய் தெரிந்து"

**இவருடன் 28 09-1993 அன்று சங்கத்தானையில் இடம்பெற்ற விமான குண்டுவீச்சில் அகால மரணமான மாணவ மாணவிகட்கும் ஏனைய பொதுமக்களுக்கும் எமது அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம்.**

உயர்தர மாணவ ஒன்றியம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.
(6524)


# லலிதா பிடவை மாளிகை

உங்களை அழைக்கிறது

தங்களின்

★ திருமண வைபவங்களுக்கு ஏற்ற ★

## கூறைத் தினிசுகள்

காஞ்சிபுரம், செந்தூரப்பூ, பெனாரஸ்,
மைசூர் சில்க்ஸ், பட்டுவேட்டிகள்
மற்றும்
பலவகை சாறிகளுக்கும், வெளிநாட்டில்
இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
சூட்டிங், சேட்டிங்
கண்ணைக் கவரும் றெடிமேட்
ஸ்கேட் & பிளவுஸ், மாட்டின் சேட்,
கிப்ஸ் சாரம் முதலானவற்றுக்கு
இன்றே நாடுங்கள்

யாழ்நகரின் முன்னணி நிறுவனம்

# லலிதா பிடவை மாளிகை

5 - 6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/7878)


## 3-ம் ஆண்டு நினைவுத் துளிகள்....



ஐயாத்துரை பராசக்தி | ஐயாத்துரை றஞ்சிதமலர்

[மணற்காடு காரைநகர்]

23- 2- 1938 > மலர்வு: > 19- 4- 1962

உதிர்வு: 15. 11. 1990

திதி: 11. 11. 1998

(15. 11. 90 அன்று காரைநகர் இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் தாயும் மகளும் ஒரே நாளில் கொல்லப்பட்டார்கள்)

குடும்பமென்னும் கோயிலிலே கொலுவீற்று இருந்தீர்கள்!!
அன்பையும் பாசத்தையும் அள்ளி நிதம் தந்தீர்கள்!
கனிவுடனே கருணையினைக் காட்டி எம்மை அணைத்தீர்கள்!
காலமெல்லாம் களிப்புடனே வாழ்வோம் என நினைக்கையிலே
காரைநகர் இராணுவத்தின் எறிகணை வீச்சினிலே
எமை விட்டுப் பிரிந்தீர்கள்! நிலவுமுகம் மறக்குதில்லை
நினைவுகளோ அழியுதில்லை! உங்கள் உயிர்பிரிந்து
ஓடிற்று மூன்றாண்டு; ஆனாலும் ஓயுமோ உங்கள் நினைவு?!
அழியாத உங்கள் நினைவுகளை ஆழப்பதித்துள்ள இதயத்தால்

உங்களது ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் — ஐயாத்துரை குடும்பத்தினர்

(6536)

# அந்தியேட்டி அழைப்பு

## நெஞ்சைவிட்டு நீங்காத கௌசியின் 45-ம் நாள் கண்ணீர்ப் பூக்கள்



## செல்வி கணேசன் கௌசிகா

CHAVAKACHCHERI HINDU COLLEGE
J/ HOLY FAMILY CONVENT

அன்புத் தாயின்மடியில் 03-03-81 — பூமித்தாயின் மடியில் 28-09-93

ஓ.... கௌசியே
நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே
மீண்டுவரும் நினைவலையால் உருகிநிற்கும்
எம்முள்ளம் என்னாளும் உனையே எண்ணும்
உன்பிரிவால் ஏங்கும் எம்துயர் பாரம்மா...

11-11-93 இன்று நிகழவிருக்கும் செல்வி கௌசிகாவின் 45ஆம் நிறைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### நன்றி நவிலல்

எம்மினிய சகோதரியின் துயர நிகழ்வின்போது வேண்டிய உதவிகள் வழங்கிய அனைவர்க்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எம் துயரில் பங்கு கொண்டவர்கள் யாவர்க்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்
"கௌசி இல்லம்" — அன்பு அப்பா, அம்மா,
சங்கத்தானை — அண்ணாமார், அக்காமார்,
சாவகச்சேரி, — நண்பர்கள், உறவினர்கள்.

(5070)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 14 – 04 – 1977



வீரச்சாவு: 12 – 10 – 1993

## 2-ம் லெப். கலைவாணன் (நேரு)

[மகானந்தராசா கோணேஸ்வரன்]

கப்புதூ, கரவெட்டி

நிலையான உறுதிகொண்டு
தளராத தாகம் சுமந்து
தமிழீழம் காண வேண்டுமென்று
பிஞ்சு வயதிலே போர்க்களம் புகுந்து
கலைவாணன் என்னும் பேரும் கொண்டு
மாவீரர் அணியிலே மலராக அமர்ந்துவிட்டாய்
மலர்ந்திடும் முப்பத்தோராம் நாளில் உனக்கு
மலர்தூவி வணங்குகிறோம் உன்கனவுகள்
நனவாக வேண்டுமென்று.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா
அக்கா உதயலட்சுமி (சுகந்தி)
(போராளி)
அண்ணா அக்காச்சி (நடராசா)
(போராளி)
அக்கா சாந்தி
மற்றும் உற்றார், உறவினரும்.

(6487)

# 45-ம் நாள் நினைவஞ்சலி

28-09-1993 அன்று செவ்வாய் மாலை யாழ்தேவி நடவடிக்கையின் போது படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களைத் தாங்க முடியாது விமானப் படையினரால் சங்கத்தானைப் பகுதியில் ஏவப்பட்ட குண்டுவீச்சினால் அதே இடத்தைச் சேர்ந்த 20 பொதுமக்கள் பதுங்கு குழிக்குள் அகால மரணமடைந்தனர்.

அன்னார்களின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### இருபது பொதுமக்களின் விபரம்:–

ஜெயதீஸ்வரன் சாந்தி 30, ஜெயதீஸ்வரன் ஜெனனி 07, ஜெயதீஸ்வரன் ரசாயினி - 11, ஜெயதீஸ்வரன் தினேஸ் - 08, கந்தையா செல்வராசா - 40, செல்வராசா சுயாத்தா - 16, செல்வராசா யசோதா - 18, சின்னராசா பவானி - 21, சின்னராசா நிறஞ்சினி - 13, சின்னராசா பிரபாகினி - 10, கோபாலரத்தினம் சுரேகா-09, கோபாலரத்தினம் சுபாகினி 15, கணேசன் கௌசிகா - 11, செல்லையா மகேஸ்வரி - 58, கணபதிப்பிள்ளை தங்கம்மா - 65, தங்கராசா சுசீலா (சசி) -21, இரத்தினகோபால் சுதர்சன் - 13, இரத்தினகோபால் சுசியந்தன் - 11, பாலசுந்தரம் சந்திரசேகரம் - 11, பாலசுந்தரம் ரதி - 02.

இறந்தோரின் ஆத்மாக்கள் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தச்சுத்தொழிலாளர் சங்கம்

தென்மராட்சிக் கிளை

[6542]

## பனைவிதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி நடைமுறைப் படுத்தி வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் புலோலி - பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் கடந்த மாதம் 15000 பனை விதைகள் நாட்டியுள்ளனர். அம்பன் - கொடடோடைப் பகுதியில் 9100 பனம் விதைகளும், கப்புத்தூவில் 5000 பனம் விதைகளும், வல்லிபுரக் கோவிலடியில் 900 பனை விதைகளும் நாட்டப்பட்டுள்ளன.

## கப்பலில் செல்ல முடியாது

(நமது நிருபர்)

எக்காரணம் கொண்டும் எவரிடம் இருந்தும் இனி கப்பலில் செல்வதற்கான விண்ணப்பங்கள் யாழ். செயலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் கப்பலில் பிரயாணம் செய்வதற்கு ஏற்கனவே நிறைய விண்ணப்பங்கள் இன்னும் வந்து கொண்டு இருக்கின்றன. அத்துடன் இம்மாத நடுப்பகுதியில் இருந்து கப்பல் சேவை நடைபெற மாட்டாது எனவும் தெரிவித்த அவர் இதனை சகலருக்கும் அறிவித்துள்ளார்.

(பா)

## படைக்கு நிதியுதவி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு நிதிபத்திற்கு பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா சேகரித்த நிதியை நேற்று முன்தினம் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிடம் அவர் ஒப்படைத்தார். அங்கவீனமுற்ற படையினருக்கு இந்த நிதி உதவி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 45ஆம் நாள் நினைவலைகள்



# 45-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
சித்த மருத்துவப் பிரிவிற்கு 1992/93ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை

நன்றி நவிலல்

எம்மினிய சகோதரியின் துயர நிகழ்வின்போது வேண்டிய உதவிகள் வழங்கிய அனைவர்க்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எம் துயரில் பங்கு கொண்டவர்கள் யாவர்க்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்
''கௌசி இல்லம்'' அன்பு அப்பா, அம்மா,
சங்கத்தானை அண்ணாமார், அக்காமார்,
சாவகச்சேரி, நண்பர்கள், உறவினர்கள்.

(5070)

## 45ஆம் நாள் நினைவலைகள்



சுபாசினி சுரேகா

28.03.1979 >மலர்வு< 09.11.1984

உதிர்வு 28.9.1993

(சாவகச்சேரி இந்து மாணவிகள்)

அன்பென்னும் கூட்டில் செல்லமாக வளர்ந்த
செல்வங்களே
மழலை மொழி பேசி தம்பியுடன் விளையாடிடவோ
அருகில்லை
கனவிலும் முகம் காணவோ கண்களும்
உறங்கவில்லை
உங்கள் பிரிவால் துடித்திடும் எங்கள் மனமோ
ஆறுவதற்கில்லை.

28-09-93 அன்று சாவகச்சேரி சங்கத்தானையில் நடந்த விமானத்தாக்குதலின் போது 18 பேருடன் பங்கரில் புதையுண்டு வாடிய இம்மலர்களின் ஆத்ம சாந்திக்கான கிரியைகள் இன்று எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் உற்றார், உறவினர், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுடன் வாடிடும்
சாரதா லேன், அப்பா — கோபாலரத்தினம்,
சங்கத்தானை. அம்மா — லலிதா
[6529] தம்பி — சுகாந்தன்

# 45-ம் நாள் நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி அழைப்பும்







**கந்தையா**
**செல்வராசா**

(உதயன் மரக்காலை உரிமையாளர் (தாடி)
சங்கத்தானை சாவகச்சேரி)

தாயின் மடியில்: 18. 12. 1954

**செல்வராசா**
**யசோதா**

(உயிரியல் விஞ்ஞான மாணவி
சா. மகளிர் மகாவித்தியாலயம்)

தாயின் மடியில்: 29. 06. 1976

**செல்வராசா**
**சுஜாதா**

(O/L மாணவி இந்துக்கல்லூரி
சங்கத்தானை)

தாயின் மடியில்: 20. 07. 1977

அநியாய அழிப்பு: **28. 09. 1993**

எமது அன்புத் தெய்வங்களே - குடும்ப விளக்குகளே - பாசத்தின் சிகரமே - எங்கள் வழி காட்டிகளே எங்கள் அன்புத் தெய்வங்கள் மூவருக்கும் - காலங்கள் எத்தனை கடந்து போனாலும் கரைந்து போகுமா உங்கள் நினைவுகள் - விழுதுகள் இருவர் நசம் கிளைகள் இரு மெழுகுதிரிகளையும் அப்பா அழைத்ததென்ன. இல்லையென்று வந்தவர்க்கு ஈய்ந்த தெய்வங்களே, உங்கள் புகழ் உலகமெங்கும் ஒளி விளக்காக விளங்குதையா. உங்கள் மூவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை எஞ்சுகிறோம்.

எங்கள் குடும்பத்தலைவரினதும் இரு பிள்ளைகளின் மரணச்செய்தி கேட்டு வந்து அனுதாபம்தெரிவித்தவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இன்று (11. 11. 1993) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவர்களுடன் அகால மரணமடைந்த 17 பேரையும் இந் நாளில் நினைவுகூருகிறோம்.

மனைவி: செ. மங்கையற்கரசி
மகன்: செ. உதயராசா
தச்சன்தோப்பு. (5071) உற்றார், உறவினர்,

டம் அவர் ஒப்படைத்தார். அங்கவீனமுற்ற படையினருக்கு இந்த நிதி உதவி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை
**சித்த மருத்துவப் பிரிவிற்கு**
**1992/93ஆம்**
**ஆண்டிற்கான**
**புதிய மாணவர்களை**
**அனுமதித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்காக மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின் வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(அ) 1989, 1990, 1992 ஏப்பிரல் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1993ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

22-11-1993இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விபரங்களையும் விண்ணப்பப்பத்திரங்களையும் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் முன்பு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய கடைசித்திகதி 22-11-1993

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
(சி-7883)

சிந்தனைக்கு

வண்டியில் மிகப் பழுதான சக்கரம்தான் மிக அதிகமாக இரைச்சல் போடும்.

— பெஞ்சமின் பிராங்ளின்

ஈழநாதம்

91, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 1071
த. பெ. எண் - 05

# ஐ. நா. சபையும் இனப்பிரச்சினையும்

கெடுபிடிப் போர் முடிவடைந்ததும் உலகில் முனைப்புப் பெற்ற பிரச்சினையாக தேசிய இனங்களின் போராட்டங்களே உள்ளன. இதனை உலக நாடுகளில் அதிகரித்து வரும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டங்களும், தேர்தல்களில் சுயாட்சி கோரும் கட்சிகளின் வெற்றியும் தெளிவாக வெளிக்காட்டுகின்றன. இதனை தற்பொழுது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர்நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலியும் ஏற்றுக் கொண்டுள்ளார். அத்தோடு, ஓர் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

''உலக நாடுகளில் தற்பொழுது உள்நாட்டுப் போர் நடக்கக் காரணம் அந்நாடுகளிலுள்ள இனப்பிரச்சினைகள் தீர்க்கப்படாமையே. இதனால் சர்வதேச அமைதி குலைகிறது. எனவே எந்தவொரு நாடும் இனப்பிரச்சினையை அசட்டை செய்ய முடியாது. இனியும் இந்நாடுகள் இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறின் அந்நாடுகளில் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஐ. நா. சபை தலையிட நேரிடும்.'' இதுவே ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் இனப்பிரச்சினை தொடர்பாகத் விடுத்த எச்சரிக்கை ஆகும்.

ஐ. நா. சபையின் பொதுச் செயலாளரின் இவ் எச்சரிக்கையானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ள அரசாங்கங்களுக்கு பொருத்தப்பாடான தொன்றுதான். ஆனால், இது எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியம் என்பதும் இந்த விடயத்தில் ஐ. நா வினால் எந்தளவிற்குச் செல்ல முடியும் என்பதும் கேள்விக்குரியதே.

ஏனெனில், கெடுபிடிப் போரின் பின்னர் ஐ. நா. சபை அமெரிக்காவின் கைப்பொம்மையாகச் செயற்படுவதாகப் பொதுவாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. இதில் உண்மை இல்லாமலும் இல்லை, அமெரிக்க நிர்வாகம் கடைப்பிடிக்கும் வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்பவே ஐ. நா. சபையின் நடவடிக்கைகளும் அமைகின்றன. அதாவது, ஐ. நா சபை உலகின் ஒரு பொதுச்சபை என்ற நிலை மாறி ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் / நாடுகளுக்கும் இடையில் வெவ்வேறு வகையான அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பது இன்று வெளிப்படையான விடயம்.

மட்டு. தமிழ்க் கிராமங்களில்

## சுற்றிவளைப்பு தீவிரம் பெருமளவு மக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கிராமங்களை படையினர் சுற்றிவளைத்து பொதுமக்களை கைது செய்து விசாரணைக்குட்படுத்தும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம் மட்டக்களப்பு 40 ஆம் கிராம முகாமிலுள்ள இராணுவம் அக்கிராமத்தை காலை 6-45 மணியளவில் சுற்றிவளைத்தது பின்னர் கிராமத்தில் உள்ள அனைத்து மக்களையும் தமது முகாமிற்கு கொண்டு சென்று விசாரணை செய்தனர். விசாரணையின் பின் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். கடந்த மாதம் 30 ஆம் திகதி அன்று காலை 6 மணியளவிலும் பழுகாமம் இராணுவத்தினர் கிராமம் ஒன்றை சுற்றிவளைத்தனர். சுற்றிவளைக்கப்பட்ட இரண்டாம் குறிச்சியிலிருந்து பொதுமக்களை முகாமிற்கு கொண்டுசென்ற படையினர் அவர்களைவிசாரணைக்குட்படுத்தினர். கிராமவாசிகள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மாத இறுதியில் மட்டக்களப்பு பழுகாமம் முகாம் இராணுவத்தினர் பழுகாமம் கண்டுமணி வித்தியாலய ஆசிரியரான விஜயநாதன் என்பவரை கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி

## வெளிநோயாளர் பிரிவை இடமாற்ற முயற்சி

மானிப்பாய் திருக்குடும்பதியான இல்லத்திலுள்ள கட்டடத்தில் கடந்த 14 மாதங்களாக தற்காலிகமாக இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்டவைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை அங்கிருந்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யுமாறு தியான இல்லத்தின் பொறுப்பாளர் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரியை கடித மூலம் கேட்டுள்ளார்.

இதனை அடுத்துஇந்தவெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை வேறு பொருத்தமான ஓரிடத்திற்கு மாற்றுவதற்கான ஒழுங்குகளை மேற்படி வைத்தியசாலை பொறுப்பதிகாரி மேற்கொண்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து அகதிகளாக தங்கியிருப்பவர்கள் உட்பட பெருந்தொகையான பொதுமக்களுக்கு தினமும் இங்கு சிறந்த வைத்திய சேவைகளை இந்த வெளிநோயாளர் பிரிவு வழங்கி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மானிப்பாய் பகுதியில் இந்த வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவை தொடர்ந்து இயங்கச் செய்வதற்கு வசதியாக இப்பகுதியிலுள்ள பொது நல நிறுவனங்கள் கட்டடம் ஒன்றை பெறுவதற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

## ஈ. பி. ஆர். எல். எவ். தேர்தலில் பங்குபற்றாது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்பட உள்ள உள்ளூராட்சி தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எவ். குழு பங்குபற்றமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் டி. பி. விஜேதுங்க உள்ளூராட்சித் தேர்தலை ஜனவரியில் நடாத்த முயற்சி செய்து வருவது தெரிந்ததே. மேற்படி தேர்தலில் பங்குபற்ற ஈ. பி. ஆர். எல். எவ். தயாராக இல்லை என தெரிவித்துள்ளது.

இத்தேர்தலில் தான் பங்குபற்ற போவதாக முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே அறிவித்துள்ளமை தெரிந்ததே

## பணிகளை நிறுத்துவோம் வன்னி செஞ்சிலுவை மகஜர்

(கிளிநொச்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின்மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டக் கிளைகளின் இணையம் மேற் கொச்சைப் படுத்தப்பட்டுள்ளது. இதற்காக மன்னிப்புக் கோரப்பட்டு மறுபிரசுரம் செய்ய வேண்டும் என்றும் செஞ்சிலுவை வானனத்

# படைமுகாம் குறித்த தகவல் திரட்டிய 60 பேர் கைது

## அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் பல்வேறு பகுதிகளிலுமிருந்து கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் அறுபது பேர் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் எனவும் நான்குபேர் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் சிறிலங்கா குற்றப் புலன் விசாரணை தலைமைப்பீட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தென்பகுதியில் இயங்கும் பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொண்டிருந்தனர் எனவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

இவர்களை குற்றப் புலன் விசாரணைக் குழுவின் விசேட பொலிசார் கைது செய்ததாகவும், இவர்கள் தமது தலைவர்களின் கட்டளைக்கு இணங்க இத்தகவல்களை சேகரித்தனர் எனவும் மேலும் தெரிவித்தார்.

இவர்களிடமிருந்து இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் குறித்து திரட்டிய தகவல்கள் அடங்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாம்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் தம்மை அடையாளம் காட்ட போலியான அடையாள அட்டைகள் கடிதங்கள் என்பன வைத்திருந்தனர் எனவும் இதனால் இவ்விடயம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டு உசார் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### மடுவில் திறக்க ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேசத்திற்கான தமிழர் புனர்வாழ்வுகழக பிரிவு அலுவலகம் திறந்து வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது. இப்பிரிவின் கீழ் முதற்கட்டமாக குழந்தைகள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு புனர்வாழ்வுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

### விஞ்ஞான தினம்

யாழ் கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்தின் விஞ்ஞானதினமான நாளை வெள்ளிக்கிழமை காலை அறிவியல் கதிர் என்ற விஞ்ஞான சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது. திருமதி. கோகிலா மகேந்திரன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

மாலைதீவு சதியில்

## மரணதண்டனை பெற்ற புளொட்குழுவினர் விதேலை

(கொழும்பு)

மாலைதீவில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த புளொட் குழுவைச் சேர்ந்த ஏழு பேரும் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

89ஆம் ஆண்டில் சதிமூலம் மாலைதீவைக் கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட புளொட் குழுவினர் கைதானது தெரிந்ததே.

இவர்களில் பலர் ஏற்கனவே சிறிலங்கா அரசின் கோரிக்கையை அடுத்து இவர்கள் சில தினங்களுக்குமுன்னர் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்கள் மகர சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு வைத்து சம்பிரதாயபூர்வமாக விடுதலை செய்யப்படுவர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## 8108 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு அடுத்த கல்வியாண்டில் 8108 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதற்கான (பெஸ்ற் போம்) முதல் விண்ணப்பிக்கும் படிவம் அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படும் என்று அறிய வருகிறது இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறிய வருகிறது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 417 பேரும், கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு 195 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மற்றும் கொழும்பு 1517 பேரும், களனி- 1180 பேரும், சிறிஜெயவர்தனபுர 1478 பேரும், றுகுணு 1106 பேரும், மொரட்டுவ 271 பேரும், பேராதனை 1682 பேரும் தெரிவாகியுள்ளனர்.

உயர்கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

## கிராமிய மக்களுக்கு கால்நடைகள் விநியோகம்

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை தெரிவு செய்து கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தினூடாக அக்குடும்பங்களுக்கு ஆடு, மாடு, கோழிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் இது வரை கொக்குவில் கிழக்கில் 15 குடும்பங்களுக்கும், கொக்குவில் தென்கிழக்கில் 14 குடும்பங்களுக்கும், அரியாலை மத்தி தெற்கில் 14 குடும்பங்களுக்கும். தாவடி தெற்கில் 13 குடும்பங்களுக்கும், பண்ணாகத்தில் 15 குடும்பங்களுக்கும், அத்தியடியில் 15 குடும்பங்களுக்கும், அராலி வடக்கில் 16 குடும்பங்களுக்கும், நவாலி வடக்கில் 15 குடும்பங்களுக்கும், இத்தாவிலில் 27 குடும்பங்களுக்கும், கோவில்வயல் கிராமத்தில் 26 குடும்பங்களுக்கும். அரசர் கேணியில் 24 குடும்பங்களுக்கும் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 5 குடும்பங்களுக்கும், கோப்பாய் தெற்கில் 5 குடும்பங்களுக்கும், தாவடி கிழக்கில் 5 குடும்பங்களுக்கும், வண்ணார் பண்ணையில் 5 குடும்பங்களுக்கும் மாடுகள் வழங்கப்பட்டுள்ளதோடு அச்சார் வெளியில் 6 குடும்பங்களுக்கும் தம்பகாமத்தில் 6 குடும்பங்களுக்கும் கோழிகள் வழங்கப்பட்டுள்ளன.

எச்சரிக்கை ஆகும்.

ஐ. நா. சபையின் பொதுச் செயலாளரின் இவ் எச்சரிக்கையானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ள அரசாங்கங்களுக்கு பொருத்தப்பாடான தொன்றுதான். ஆனால், இது எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியம் என்பதும் இந்த விடயத்தில் ஐ. நா வினால் எந்தளவிற்குச் செல்ல முடியும் என்பதும் கேள்விக்குரியதே.

ஏனெனில், கெடுபிடிப் போரின் பின்னர் ஐ. நா. சபை அமெரிக்காவின் கைப்பொம்மையாகச் செயற்படுவதாகப் பொதுவாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. இதில் உண்மை இல்லாமலும் இல்லை, அமெரிக்க நிர்வாகம் கடைப்பிடிக்கும் வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்பவே ஐ. நா. சபையின் நடவடிக்கைகளும் அமைகின்றன. அதாவது, ஐ. நா சபை உலகின் ஒரு பொதுச்சபை என்ற நிலை மாறி ஒவ்வொரு பிராந்தியத்திற்கும்/நாடுகளுக்கும் இடையில் வெவ்வேறு வகையான அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பது இன்று வெளிப்படையான விடயம்.

அடுத்ததாக ஐ. நா. அண்மையில் நேரடியாக தலையிட்ட இனப்பிரச்சினை தொடர்பான விடயங்கள் வெற்றி அளித்ததாகவும் இல்லை. இதற்கு உதாரணமாக பொஸ்னியா ஒன்றே போதுமானது. சேபியர்களினாலும், குரோசியர்களினாலும் படுகொலைக்குள்ளாகி வரும் பொஸ்னிய முஸ்லிம் மக்களை வருடங்கள் சில சென்றும் ஐ. நா. சபையினால் தடுத்து நிறுத்த முடியவில்லை. மற்றும் சோமாலியாவில் ஐ. நா. சபையின் தலையீடும் பெரும் நெருக்கடி மிக்கதாக மாறியுள்ளது.

அதாவது, கடந்த கால அனுபவங்களும், நிகழ்கால அனுபவங்களும் ஐ. நா. சபையின் நேரடித் தலையீடுகள் இனப்பிரச்சினையிலும் சரி, நாடுகளுக்கிடையினான முரண்பாடுகள் ஆனாலும் சரி வெற்றி பெற்றதாக இல்லை. ஐ. நா. சபை பொருளாதார நெருக்கடிகளையும், உயிரிழப்புக்களையும் சந்தித்ததே மிச்சம் இந்நிலையில், ஐ. நா. சபை இனப்பிரச்சினை தொடர்பாக நேரடித் தலையீட்டைப் பற்றிச் சிந்திக்கும் முன் போராட்டம் நடத்தும் இனங்கள் தொடர்பான பொது முடிவொன்றிற்கு வர வேண்டும்.

இதன் பிரகாரம் ஐ. நா. சபை, தமது விடுதலைக்காகப் போராடி வரும் இனங்களின் சுயநிர்ணய உரிமையை முதலில் அங்கீகரிக்க வேண்டும். இவ் அங்கீகாரமானது அத்தேசிய இனங்களின் அந்தஸ்தை உயர்த்துவதாக அமைவதோடு இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே காணப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை அடக்குமுறைகளை மேற்கொள்ளும் அரசுகளுக்கு ஏற்படுத்தும். அதுவும் சாத்தியமாகாது போனால் அந்நாடுகளின் மீது பொருளாதாரத் தடை ஐ. நா. விதிக்கலாம்.

ஐ. நா. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் பெரும் பொருளாதார நெருக்கடிகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளை ஐ. நா. தவிர்த்துக் கொள்ள முடியும். அத்தோடு, ஐ. நா விற்கு இது புதிய விடயம் ஒன்றும் அல்ல. சோவியத் யூனியன் சிதைந்தபோது ஐ. நா. அதன் பதினைந்து குடியரசுகளையும் தனித்தனி அரசுகளாக அங்கீகரித்ததோடு, ஐ. நா. சபையில் அங்கத்துவம் வழங்கியமையும், பாலஸ்தீனமக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கனவே அங்கீகரித்தமையும் இந்த வகையில் குறிப்பிடக் கூடியவை ஆகும்.

இவ்வாறானதொரு முடிவை ஐ. நா. சபை எடுக்குமானால் தற்பொழுது அதன் மீது சுமத்தப்படும் அமெரிக்காவின் கைப்பொம்மை என்ற குற்றச்சாட்டும் நீங்குவதோடு, பெரும் சுமையும் அதற்குக் குறையும். அவ்வாறு இல்லாது விட்டால், அதாவது, இன்று குற்றம் சாட்டப்படுவதுபோல், அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையையே அமுல்படுத்தும் ஒரு அமைப்பாக ஐ. நா. இருக்குமானால், ஐ. நா. தலையீடும், அதன் படையும் அமெரிக்காவின் தலையீடாகவும் அதன் படையுமாகவே கருதப்படும், இதனால் பிரச்சினைகள் தீருவதற்குப் பதில் சிக்கல்களை மேலும் உருவாக்கவே வழிவகுக்கும். இது வரலாற்றின் வெளிப்பாடாகும்.

---

வைத்தியசாலை பொறுப்பில் ... கோள் விடுக்கப்பட்டுள்ளது

## ஈ. பி. ஆர். எல். எவ். தேர்தலில் பங்குபற்றாது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்பட உள்ள உள்ளூராட்சி தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எவ். குழு பங்குபற்றமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் டி. பி. விஜேதுங்க உள்ளூராட்சித் தேர்தலை ஜனவரியில் நடாத்த முயற்சி செய்து வருவது தெரிந்ததே. மேற்படி தேர்தலில் பங்குபற்ற ஈ. பி. ஆர். எல். எவ். தயாராக இல்லை என தெரிவித்துள்ளது.

இத்தேர்தலில் தான் பங்குபற்ற போவதாக முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே அறிவித்துள்ளமை தெரிந்ததே.

## பணிகளை நிறுத்துவோம் வன்னி செஞ்சிலுவை மகஜர்

(கிளிநொச்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டக் கிளைகளின் இணையம் மேற்படி மாவட்டங்களில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளப் போவதாக அதன் தலைமை அலுவலகத்துக்கு மகஜர் ஒன்றின் மூலம் எச்சரிக்கை செய்துள்ளனர்,

மன்னார் மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளைத் தலைவர், உபதலைவர், செயலாளர், ஆட்சிக்குழு உறுப்பினர் ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் என்றும், கொடி வாரக் கொண்டாட்டத்துக்காக வெளியிடப்பட்ட சுவரொட்டியில் தமிழ்மொழி கொச்சைப் படுத்தப்பட்டுள்ளது. இதற்காக மன்னிப்புக் கோரப்பட்டு மறுபிரசுரம் செய்ய வேண்டும் என்றும் செஞ்சிலுவை வாகனத் தொடர் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் கெடுபிடி நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும் செஞ்சிலுவை தலைமை அலுவலகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இக் கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் மேற்படி மாவட்டங்களில் செஞ்சிலுவையின் நடவடிக்கைகளை நிறுத்திவிடப் போவதாகவும் அதே மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாடுகளை திருடி இறைச்சி விற்றவர் கைது

(பருத்தித்துறை)

புலோலி, வராத்துப்பளை, தும்பளைக் கிராமங்களில் மாடுகள் திருடப்படுவதாக இக்கிராம மக்கள் பருத்தித்துறை காவல்துறையில் செய்து கொண்ட புகார்களின் மீது தமிழீழ காவல்துறையினர் துரித விசாரணைகளை மேற்கொண்டனர் இதையடுத்து மாடுகளைத் திருடி இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரொருருவர் பருத்தித்துறை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

இக்கிராமப் பகுதிகளில் நடைபெற்ற பல மாட்டுத் திருட்டுகளில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் இந்த சந்தேக நபர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதையடுத்து மாட்டுத் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட இன்னும் சிலர் கைது செய்யப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது. இம்மாட்டுத் திருட்டுச் சந்தேக நபர்கள் கிராமிய மக்களின் மாடுகளைத் திருடி அம் மாடுகளை இரவு வேளைகளில் வெட்டி இறைச்சி விற்பனைகளை மேற்கொண்டு வந்தனர் என்றும் தெரிய வந்துள்ளது.

## இலவச ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை பின்தங்கிய பகுதியான வடமராட்சிகிழக்கு மாமுனையிலும், நாகர் கோவிலிலும் இரு இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை கிளைகளைத் திறந்து வைத்திய சேவைகளை வழங்கவுள்ளது.

குடத்தனை உப அலுவலகப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் கூடுதலாக வாழும் நாகர் கோவிலிலும் செம்பியன்பற்று உப அலுவலகப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் கூடுதலாக வாழும் மாமுனையிலும் இவ்விரு இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கிளைகளைத் திறந்து வைப்பதற்கான துரித நடவடிக்கைகளைப் பருத்தித்துறை பிரதேசசபை மேற்கொண்டுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செல்வநிநாதர் தெரிவித்தார்.

(25)

---

கையும் வெளியிடப்படவுள்ளது. திருமதி. கோகிலா மகேந்திரன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

மாலைதீவு சதியில்

## மரணதண்டனை பெற்ற புளொட்குழுவினர் விடுதலை

(கொழும்பு)

மாலைதீவில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த புளொட் குழுவைச் சேர்ந்த ஏழு பேரும் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

89ஆம் ஆண்டில் சதிமூலம் மாலைதீவைக் கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட புளொட் குழுவினர் கைதானது தெரிந்ததே.

இவர்களில் பலர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்: எஞ்சியிருந்த ஏழு பேரும் தற்போது இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா அரசின் கோரிக்கையை அடுத்து இவர்கள் சில தினங்களுக்குமுன்னர் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்கள் மகர சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு வைத்து சம்பிரதாயபூர்வமாக விடுதலை செய்யப்படுவர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## பயிற்சி கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விவசாய போதனாசிரியர்களுக்கான மாதாந்தப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று இன்று காலை ஒன்பது மணிக்கு திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும்.

(24)

## செங்கை ஆழியான் நூல்வெளியீடு

யாழ். பிரதேசச் செயலாளர் கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) எழுதிய ''யாழ்ப்பாணத்து இராத்திரிகள்'' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ். இலக்கிய வட்டத் தலைவர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும்.

[24]

## உலர்உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தீவக ம.நோ.கூ. சங்கங்களில் இடம்பெயர்ந்தவர்களிற்கான ஐப்பசிமாத இறுதி இரு வார உலர்உணவு தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் குடும்பம் ஒன்றுக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெயும் ஒருலீற்றர் ரூ. 25/- வீதம் மேற்படி சங்கங்களின் எரிபொருள் விற்பனைக் கிளைகளினூடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(88)

---

அக்குடும்பங்களுக்கு ஆடு, மாடு, கோழிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் இது ... களுக்கும், தாவடி தெற்கில் 13 குடும்பங்களுக்கும், பன்னாகத்தில் 15 குடும்பங்களுக்கும், அந்தியடியில் 15 குடும்பங்களுக்கும், அராலி வடக்கில் 16 குடும்பங்களுக்கும், நவாலி வடக்கில் 15 குடும்பங்களுக்கும், இத்தாவிலில் 27 குடும்பங்களுக்கும், கோவில்வயல் கிராமத்தில் 26 குடும்பங்களுக்கும். அரசர் கேணியில் 24 குடும்பங்களுக்கும் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 5 குடும்பங்களுக்கும், கோப்பாய் தெற்கில் 5 குடும்பங்களுக்கும், தாவடி கிழக்கில் 5 குடும்பங்களுக்கும், வண்ணார் பண்ணையில் 5 குடும்பங்களுக்கும் மாடுகள் வழங்கப்பட்டுள்ளதோடு கச்சார் வெளியில் 6 குடும்பங்களுக்கும் தம்ப காமத்தில் 6 குடும்பங்களுக்கும் கோழிகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ. நடவடிக்கையின்போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

| | |
|---|---|
| மேஜர் கோபு/ரதீஸ் | பத்மநாதன் கோபுநாதன் உடுப்பிட்டி. |
| லெப். நெல்சா | சரோசினிதேவி சின்னக்குட்டி கொடிகாமம். |
| கப்டன் சத்தியராஜ் | கந்தையா சத்தியலிங்கம் திருமலை. |
| லெப். தயாளன் | சிவகுரு மோகனசுந்தரம் வவுனியா. |
| லெப். சுரேன் | தெய்வேந்திரம் சுந்தரமூர்த்தி திருமலை. |
| வீரவேங்கை றெஜி | பற்குணராசா செந்தூரன் மானிப்பாய். |
| வீரவேங்கை விமலசுந்தரம் | வீரசிங்கம் தெய்வநாயகம் திருமலை. |
| வீரவேங்கை அல்வின் | சிவபாலன் கருணாகரன் மட்டு. |
| வீரவேங்கை நிதி | சோமசுந்தரம் நித்தியானந்தமூர்த்தி கிளிநொச்சி. |
| வீரவேங்கை அல்பேட் | கணபதிப்பிள்ளை சுவேந்திரன் பருத்தித்துறை. |
| வீரவேங்கை சசி | சௌந்தரராஜா சுரேஸ்குமார் திருமலை. |
| வீரவேங்கை நிதி | வசந்தமலர் செல்லத்துரை கொடிகாமம். |
| வீரவேங்கை நளா | லலிதாதேவி நடராசா புங்குடுதீவு. |
| வீரவேங்கை நாதன்/சிதம்பரநாதன் | தம்பு ஆனந்தராசா கைதடி. |
| வீரவேங்கை ரசிந்தன் | வெற்றிவேல் வரதராசா தெல்லிப்பழை. |
| வீரவேங்கை ராஜன் | குமாரசாமி குணராசா கொக்குவில். |
| வீரவேங்கை யசோ | லோகேஸ்வரன் சுதாகர் ஒட்டுமடம். |
| வீரவேங்கை ஜோகன் | கந்தையா வசீகரன் கரணவாய் தெற்கு. |
| வீரவேங்கை சீனு | மணியம் சிவராசன் திருமலை. |
| வீரவேங்கை ரூபிகா | வினோதா வேலாயுதபிள்ளை மணலாறு. |

1991ஆம் ஆண்டு ஆ க வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக்கொண்ட மாவீரர் உருவப்படங்கள் சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை கொக்குவிலில் 8-30 மணிதொடக்கம் 4-30 மணி வரையான நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

ஈழநாதம்

## பாடசாலைகளுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெற இருக்கும் யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பின்வரும் அணிகள் கலந்து கொள்கின்றன.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் 15 வயதுப்பிரிவில் புனித ஜேம்ஸ் ம. வி. எதிர்த்து புனித கென்றியரசர் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் ம. வி. எதிர்த்து புங்குடுதீவு மகா வி. மோதும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் 15 வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வித்தியாலயமும், யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் 19 வயதுப் பிரிவில் கரவெட்டி விக்கினேஸ்வராவை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் நெல்லியடி ம. ம வித்தியாலய மைதானத்தில் 19 வயதுப் பிரிவில் புனித சாள்ஸ் ம. வி. எதிர்த்து ஹாட்லிக் கல்லூரியும் மோதுகின்றன.

## குளங்கள் புனரமைப்பு

முல்லைமாவட்டத்தில் காலபோக நெற்செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கும் நோக்குடன் சிறு குளங்களை சிரமதான அடிப்படையில் புனரமைக்கும் பணியினை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய உற்பத்திக் குழுக்களுடனும் மக்களுடனும் இணைந்து மேற்கொ[illegible]டது.

நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, முல்லைப் பிரதேசங்களிலே இதுவரை சுமார் பன்னிரண்டு சிறு குளங்கள் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டுள்ளன.

## குண்டுவீச்சு விமானங்கள் அளம்பிலில் தாக்குதல்

(முல்லைத்தீவு)

மணலாறு மாவட்டத்தில் அளம்பில் பகுதியில் சிறிலங்கா அரசுக்குச்சொந்தமான குண்டு வீச்சு விமானங்கள் நேற்று முன்தினம் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

காலை 11 மணியளவில்அப் பகுதிக்குவிரைந்துவந்த குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டன.

இத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம்தெரியவரவில்லை.

## அச்சத்தின் காரணமாக ரணிலின் காவலர்கள் சூடு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பயணம் செய்துகொண்டிருந்த வாகன அணியிலிருந்து வேறொரு ஒழுங்கை வழியாக வந்துகொண்டிருந்த கார் ஒன்றை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதுபற்றி தெரியவருவதாவது, கொழும்பின் ஒரு பகுதியில் பிரதமரின் வாகன தொடர்அணி சென்று கொண்டிருந்த போது திடீர் என்று ஒழுங்கை ஒன்றினூடாக வேகமாக வந்த காரை கண்டு பாதுகாவலர் அதை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் காரின் சக்கரங்களின் காற்று வெளியேறியதால் கார் அதே இடத்தில் நிறுத்தப்பட்டது. அக்காரினுள் சந்தேகப்படும்படியாக ஏதும் இல்லை என்றும் பாதுகாப்பாளர் கிலி கொண்டதனால்தான் இத்தாக்குதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது

## தமிழ்நாட்டில் பெருமழை 25பேர் வெள்ளத்தால் பலி

(சென்னை)

தமிழ் நாட்டில் கடும் மழை வெள்ளம் காரணமாக இதுவரைஇருபத்தைந்துபேர்வரை இறந்துள்ளனர். மேலும் கடலில் சென்ற 52 மீனவர்கள் இன்னும் கரைசேரவில்லை.

மூன்று நாள்கள் பெய்யும் கடும் மழையால் கோவை நகரின் பெரும் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது பொதுவாகத் தமிழ்நாடு முழுவதும் ரெயில் மற்றும் வீதிப்போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது தொடர்ந்து மழை பெய்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் சுமார் ஆயிரம் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள் 10-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11587

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26 5281, 26-1658, 27-9756, 26-1495, 26-3130, 26-9611, 27-6524, 24-1040, 24 5529, 24-4457, 41-7041.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4896, 42 9325, 41-8686, 42-1122, 42-1464, 42-3615, 42-3339, 28-1686, 26-5760, 26 8879, 24 5721, 41-9038, 26-5814, 27-9825, 26-7187, 42-2397.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு மாதிரிகுடியேற்ற திட்டம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சுன்னாகம் மத்திய பகுதியில் மாதிரி குடியேற்றத்திட்டம் ஒன்று நேற்று மாலை 5.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற திறப்புவிழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வுப் பிரிவைச் சேர்ந்த திரு. ரவி அவர்கள் குடியேற்றத் திட்டத்தை திறந்துவைத்தார். தேசியக்கொடியை வலிகாமம் கோட்டத் தளபதி திரு. இளங்குமரன் ஏற்றி வைக்க, மங்கள விளக்கை வலிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83ஐச் சேர்ந்த திரு. எல். ஆர். முத்தையா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

குடியிருப்பாளர்களுக்கான திறப்பினை அரச சார்பற்ற இணையத்தலைவர் திரு. தமபித்துரை வழங்கி வீடுகளை மக்களுக்கு வழங்குதலை ஆரம்பித்து வைத்தார். வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 14 குடியிருப்புகள் வழங்கப்பட்டன ஒவ்வொரு வீடும் 11,4 பரப்பாளவில் அமைக்கப்பட்டிருந்தது. (11), (09)

## கணனிக் கண்காட்சியில் பெருந்திரள் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கணனிக் கிளையினர் யாழ் பல்கலைக்கழகத்துடனும் மற்றும் யாழ்மாவட்டத்தின் கணனிக் கல்வி நிறுவனங்களின் ஆதரவுடனும் கணனி இலத்திரனியல் கண்காட்சிஒன்றை நேற்று யாழ்பல்கலைக்கழகவிஞ்ஞான பீடத்தில் ஆரம்பித்துள்ளனர்.

இக் கண்காட்சியை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நேற்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகிய இக் கண்காட்சியின் ஆரம்பவிழாவில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணிப்பாளர் வி. செம்பியன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கலாநிதி மகேஸ்வரன் ஏற்றிவைத்தார். இக் கண்காட்சியை பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் மற்றும் பலரும் கண்டுகளித்தனர். இதில்கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம், கணனி இலத்திரனியல் தொழில்நுட்பம், அடிப்படைத்தத்துவங்கள், கணனியின் வரலாறு, கணனியின்விந்தைகள், கணனி விளையாட்டுகள் போன்றவை காண்பிக்கப்பட்டன மேலும் இக்கண்காட்சி இன்றும்நாளையும் தொடர்ந்து நடைபெறுமென தெரியவருகின்றது.

(பா)

### புல் வளர்ப்பு திட்டம்

கால்நடைகளுக்கான புல் வளர்ப்புத்திட்டம் ஒன்றினை முல்லைமாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஒட்டிசுட்டானில் பேராறு கிராமத்தில் இரண்டு ஏக்கரில் புதிதாக 4000 பூசா ஜயன்பீ நேப்பியர் புல்துண்டங்கள் நாட்டப்பட்டுள்ளன. இதிலிருந்து கிடைக்கும் புல்லின விதைகளை சேகரித்து மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் பாரிய அளவில் செய்கை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைவிட பலவினப் புல்லையும் நடுகை

## 31-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி சர்வராஜினிதேவி கந்தையா

(நெசவு போதனாசிரியர், மாவிசந்தி)

தோற்றம் 06-08-1946 | மறைவு 14-10-1993

எங்கள் குடும்பத் தலைவியின் 31-ம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகளும் இன்று (11-11-1993) வியாழக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்னாரது மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

புலோலிமேற்கு, பருத்தித்துறை

பிரிவால் துயருறும் சி. வ. கந்தையா

## மண்ணெண்ணெய்க்குப் பதில் வெற்றுப் பீப்பாக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு மண்ணெண்ணெய்ப் பீப்பாக்கள் என்ற பெயரில் வெற்றுப்பீப்பாக்கள் கப்பல் ஒன்றில் சுமார் இருபது வரையிலான வெற்றுப் பீப்பாக்கள் வந்து சேர்ந்ததாக யாழ். மேலதிக அரசாங்க

## 11-வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் செல்வகாந்த்

சுந்தசாமி -- செல்லம்மா தம்பதிகளின் புதல்வன் செல்வன் செல்வகாந்த் தனது 11 வது பிறந்ததினத்தை [இல.19, கந்தர்மடம்] தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்காமார் அண்ணா, பெரியப்பா, பெரியம்மா, கனடா, ஜேர்மன்,



# திருமதி சர்வாஜினிதேவி கந்தையா

(நெசவு போதனாசிரியர், மாலிசந்தி)

தோற்றம் 06-08-1946 — மறைவு 14-10-1993

எங்கள் குடும்பத் தலைவியின் 31-ம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகளும் இன்று (11-11-1993) வியாழக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்னாரது மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

புலோலிமேற்கு,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்
சி. வ. கந்தையா
[கணவர்]

(6547)

## உன் நினைவூட்டும் ஓராண்டு நாள்

ஈழமண்ணில் உதயம்
02 — 04 — 1974



ஈழமண்ணிற்காக அஸ்தமனம்
24 — 10 — 1992

## 2ம் லெப். இறைகுமார் (நசார்)

(குமாரசாமி துவாரசலிங்கம்)

திதி: 11-11-93

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசத்தின் ஒளிவிளக்காய்
நிமிர்ந்துன் தேசத்திற்காய்
விதையாகி நீ ஆண்டொன்று சென்றாலும்
நம் வேதனையின் மத்தியிலும்
நின் கனவுகள் நனவாக
இறைகுமாரா! நிறைவாக
இறைபதம் வேண்டி நிற்போம்.

நின் பிரிவாற்றாமை தாங்காத
பெற்றார், சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(6528)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## புல் வளர்ப்பு திட்டம்

கால்நடைகளுக்கான புல் வளர்ப்புத்திட்டம் ஒன்றினை முல்லைமாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஒட்டிசுட்டானில் பேராறு கிராமத்தில் இரண்டு ஏக்கரில் புதிதாக 4000 பூசா ஜயன்ட் நேப்பியர் புல்துண்டங்கள் நாட்டப்பட்டுள்ளன. இதிலிருந்து கிடைக்கும் புல்லின விதைகளை சேகரித்து மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் பாரிய அளவில் செய்கை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைவிட பலவின புல்லையும் நடுகை செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ஹேரத்

அதிகாரங்களும் பாராளுமன்றத்திடமே உண்டு. அரசு நிதி தொடர்பான முழுக்கட்டுப்பாடும் பாராளுமன்றத்தின் மீதேயே உள்ளது என அரசியலமைப்பு சட்டத்தில் 148 சரத்தில் கூறப்பட்டுள்ளது. பாராளுமன்றத்திற்கு உள்ள இந்த அதிகாரத்தை எவராலும் மீறமுடியாது. இதனால் தான் ஆரம்பகாலத்திலிருந்தே நிதி தொடர்பான பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சரே வருடாந்தம் வரவு செலவுத் திட்டத்தை இச் சபையில் சமர்ப்பித்து வந்தார் இச்சபையின் மகத்தான சம்பிரதாயத்தை இவ்வாறு தகர்ப்பதை எதிர்க்கட்சியினராகிய நாம் வன்மையாக கண்டிக்கிறோம்,

இச்சபைக்கு நிதிக்குப்பொறுப்பான நிதி விவாகாரங்களுக்கு சபையில் பதிலளிக்கக் கூடிய அமைச்சருக்கு புறம்பாக வேறொருவர் வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்தும் சந்தர்ப்பத்தில் இச்சபையில் எம்மால் இருக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்'' எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை முஸ்லிம்காங்கிரஸ், ஈ.பி. ஆர். எல்.எவ், தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் சபைக்கு சென்றிருக்கவில்லை திவ்வியநாதன், கருணாகரன், அயூப் ஆகிய எதிர்க்கட்சியினர் சபையில் தொடர்ந்து இருந்தனர்,

எதிர்க்கட்சியினர் வெளியேறியபோது ''நீங்கள் இப்படியே போய்விடுங்கள் மீண்டும் சபைக்கு வராதீர்கள்'' என அரசாங்கக்கட்சியினர் கூச்சலிட்டனர்,

... ல்வரன் ஏற்றிவைத்தார். இக்கண்காட்சியை பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பலரும் கண்டுகளித்தனர். இதில் கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம், கணனி இலத்திரனியல் தொழில்நுட்பம், அடிப்படைத்தத்துவங்கள், கணனியின் வரலாறு, கணனியின் விந்தைகள், கணனி விளையாட்டுகள் போன்றவை காண்பிக்கப்பட்டன மேலும் இக்கண்காட்சி இன்றும்நாளையும் தொடர்ந்து நடைபெறுமென தெரியவருகின்றது.

(பா)

வாழ்வு நிறுவனம் 8 ஐச் சேர்ந்த திரு. எல். ஆர். முத்தையா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

குடியிருப்பாளர்களுக்கான திறப்பினை அரச சார்பற்ற இணையத்தலைவர் திரு. தம்பித்துரை வழங்கி வீடுகளை மக்களுக்கு வழங்குதலை ஆரம்பித்து வைத்தார். வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 14 குடியிருப்புகள் வழங்கப்பட்டன ஒவ்வொரு வீடும் 1 1,4 பரப்பாளவில் அமைக்கப்பட்டிருந்தது. (11), (09)

## மண்ணெய்க்குப் பதில் வெற்றுப் பீப்பாக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு மண்ணெண்ணெய்ப் பீப்பாக்கள் என்ற பெயரில் வெற்றுப்பீப்பாக்களும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பில் இருந்து பருத்தித்துறை துறைமுகத்துக்கு மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களை ஏற்றிவந்த கப்பல் ஒன்றில் சுமார் இருபது வரையிலான வெற்றுப் பீப்பாக்கள் வந்து சேர்ந்ததாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் தெரிவித்தார்.

இவ்வாறு வெற்றுப்பீப்பாக்கள் மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களுடன் யாழ். குடாநாட்டிற்கு வந்தடைவது இதுதான் முதற்தடவையல்ல என தெரிவிக்கப்படுகிறது. [க]

## பாதுகாப்பு

மோட்டார் வாகனங்கள் மற்றும் சைக்கிள் வண்டிகள் ஆகியவற்றின்மீது இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது.

ஆடைத் தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்க வாய்ப்புகள் நீக்கப்பட்டுள்ளன.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவு திட்டத்தில் உள்ள சில அம்சங்கள் வருமாறு:-

ஃ புடைவைகள் மீதான தீர்வைகள் குறைக்கப்பட்டுள்ளன.

ஃ 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரசஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். இதற்கென 18 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கான யோசனை வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு அவர்களின் அடிப்படைச் சம்பளத்தைப் பொறுத்து கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் இந்தத் திகதிக்குப்பின்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு திரட்டிய சம்பள அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும் ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைத் தீர்க்க இது வழிவகுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃ வெளிநாடுகளில் ஒரு ஆண்டுக்கு மேல் வேலை செய்து நாடு திரும்பும் இலங்கையர்கள் ஒருமாதத்திற்குள் தீர்வையற்ற பொருள்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதியளிக்கப்படும்.

ஃ சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கும் தனியார் துறையினருக்கும் வரிச் சலுகைகள் அளிக்கப்படும்.

ஃ மோட்டார்கார்கள்மீதான சுங்கத்தீர்வை குறைக்கப்படும்

ஃ கொம்பனி வரி 35 சதவீதத்திற்கு குறைக்கப்படும்.

ஃ மொத்த விற்பனை வரியை ஒருமுகப்படுத்துவதற்கான பல யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஃ உணவுப் பொருள்களுக்கான மொத்த விற்பனவுவரி 10 சத வீதத்தில் இருந்து 5சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

ஃ மிளகாய், ரின் மீன் ஆகியவற்றிற்கு 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்படும்.

ஃ பதனிடப்பட்ட இறைச்சி மற்றும் கொக்கோ உற்பத்தி மீதான வரி 20சதவீதத்தில் இருந்து 10சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

ஃ தனிப்பட்ட வருமான வரி தொடர்பாக முதலாவது வரி எல்லை 21ஆயிரத்தில் இருந்து 31ஆயிரம்ரூபாவாக அதிகரிக்கப்படும்.

ஃ மென்பானங்கள் மீதான வரி போத்தல் ஒன்றிற்கு 25சதத்தால் குறைக்கப்படும்

ஃ கொக்கோக்களில் தயாரிக்கப்படும் சொக்லேட்டுகளின் வகைகள் 5சதவீதத்தினால் குறைக்கப்படும்.



## செல்வன் செல்வகாந்த்

கந்தசாமி -- செல்லம்மா தம்பதிகளின் புதல்வன் செல்வன் செல்வகாந்த் தனது 11 வது பிறந்ததினத்தை [இல.19, கந்தர்மடம்] தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்காமார் அண்ணா, பெரியப்பா, பெரியம்மா, கனடா, ஜேர்மன், சுவிஸ் அக்காமார், அண்ணாமார், சவுதி சித்தப்பா, சித்தி, பேத்தி, நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[6534]

## கணனி இலத்திரனியல் கண்காட்சி

1993 நவம்பர் 11-ம், 12-ம் திகதி

நேர ஒழுங்குகள்

திகதி 11 - 11 - 93
நேரம்: காலை 8 00 மணி
பார்வையிடுவோர்: கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி கலாசாலை
நேரம்: காலை 10-00 மணி
பார்வையிடுவோர்: பண்டத்தரிப்பு கோட்டப் பாடசாலைகள்.
நேரம்: பிற்பகல் 1-00 மணி
பார்வையிடுவோர்: மருதனார்மடம் கோட்ட பாடசாலைகள்.
நேரம்: மாலை 3-30 மணி
பார்வையிடுவோர்: பொதுமக்கள்
திகதி: 12 - 11 - 93
நேரம்: காலை 8 00 மணி
பார்வையிடுவோர்: தனியார் கல்வி நிறுவனங்கள் உயர் கல்வி நிறுவனங்கள்
நேரம்: காலை 9-00 மணி
பார்வையிடுவோர்: தென்மராட்சி கோட்டப் பாடசாலைகள்
நேரம்: பிற்பகல் 1 00 மணி
பார்வையிடுவோர்: வேம்படி மகளிர் கல்லூரி வடமராட்சிகோட்டப்பாடசாலைகள்
நேரம்: மாலை 3-00 மணி
பார்வையிடுவோர்: ஏனைய பாடசாலைகள் பொது மக்கள்

இந்த நேர சூசிக்கு ஏற்ப சகலரையும் ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் ரிக்கற்றுகளை கணகாட்சி முகப்பில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரவேசம் ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-

நன்றி.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி 7903)